வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 84 of 2017

வழக்கு சாட்சி - PW 3

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. சேகர் | தொழில் | : | கம்பெனி வேலை |
| தந்தை பெயர் | : | கன்னையன் | வயது | : | |
| கிராமம் | : | நாகலிங்கபுரம் கொடுவாய் | | | |
| தாலுக்கா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 05.08.2025.

( எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் சட்டப்பிரிவு 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது).

**முதல் விசாரணை :** **நாள் : 05.08.2025.**

1) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு கம்பெனி வேலை செய்து வருகிறேன். கடந்த 2017 ஆம் வருடம் ஒரு நாள் தேதி மாதம் ஞாபகம் இல்லை காலையில் என் வீட்டில் இருந்து பெட்ரோல் போடுவதற்காக கோவை - திருச்சி ரோட்டில் உள்ள லோகு பெட்ரோல் பங்கிற்கு பெட்ரோல் போடுவதற்காக சென்று இருந்தேன். அப்போது ஒரு டேங்கர் லாரி பெட்ரோல் போட்டுவிட்டு பெட்ரோல் பங்கில் இருந்து தெற்கில் இருந்து திரும்பி கிழக்கு நோக்கி சென்றபோது அப்போது கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி வந்த கார் ஒன்று வந்தது அந்த காரின் மீது பெட்ரோல் போட்ட லாரி மோதிவிட்டது. காரினுள் இருந்த இரண்டுநபர்களுக்கு அடிப்பட்டிருந்தது. உடனே பக்கத்தில் இருந்தவர்கள் காரில் இருந்தவர்களை வெளியே தூக்கி பார்த்தோம். அதில் காரில் இருந்த ஒரு நபரின் செல்போனை எடுத்து அவருடைய நண்பர்களுக்கு தகவல் சொன்னேன். அதன் பிறகு ஆம்புலன்ஸ் மூலமாக மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தோம். டேங்கர் லாரியை ஓட்டி

வந்த நபரை சம்பவத்தின் போது பார்த்தேன் அடிப்பட்ட இரண்டு நபர்களை பார்த்த பதற்றத்தில் தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>** :

1) போலீஸ் விசாரித்த போது கம்பெனிக்கு வேலை செல்கிறேன் என்ற விவரத்தை சொனனேன் என்றால் சரிதான். நான் எத்தனை மணியளவில் வீட்டிற்கு புறப்பட்டேன் என்றால் ஞாபகம் இல்லை. எந்த வாகனத்தில் வந்தேன் என்றால் இருசக்கர வகனத்தில் வந்தேன் . அதன் பதிவெண் மற்றும் என்ன வண்டி என்ற விவரத்தை போலீசாரிடம் சொன்னேன் என்றால் சொல்லவில்லை. நான் பெட்ரோல் பங்கில் எந்த இடத்தில் இருந்தேன் என்றால் பெட்ரோல் பங்கின் கிழப்புறம் இருந்தேன். பெட்ரோல் பங்கில் சுமார் எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால் 4 பேர் இருந்தார்கள். விபத்து நடநத்போது இருட்டாக இருந்தது என்றால் ஞாபகம் இல்லை. சம்பவ இடத்திற்கு உடனே போலீசார் வந்தார்கள் என்றால் சரிதான்.

2) போலீசார் பெட்ரோல் பங்கில் வேலை செய்த நபர்கள் மற்றும் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள்.நான் சத்தம் கேட்டுதான் பார்ததேன் என்றால் சரிதான். போலீசார் விசாரித்தப்போது அவ்வாறு தான் சொன்னேன் என்றால் சரிதான். பெட்ரோல் பங்கில் விசாரித்தப் பிறகு போலீசார் மறுபடியும் விசாரித்தார்களா என்றால் காவல் நிலையம் வரவைத்து விசாரித்தார்கள். நான் சொன்ன விவரங்கள் தவறு போலீசார் கேட்டுக்கொண்டதற்கினங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA Digitally signed by S SAPNA Date: 2025.08.05 21:16:41 +0500

நீதித்துறை நடுவர்,

பல்லடம்.